அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம்: 21/2006(1)

எனது இல: தா/4/3/1/14 – 1
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு . 07

2007.07.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் , அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் யாவர்க்கும்.

# அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் தற்காலிக, அமைய/பதிலீட்டு மற்றும், ஒப்பந்த அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்த ஊழியர்களை நிரந்தரமாக்குதல்.

2006.12.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2006 இன் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அதில் பந்தி இலக்கம் III.இற்குப் பதிலாக பின் குறிப்பிடப்படும் பந்தியை பதிலீடு செய்து திருத்தம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

III. (அ) பதவிக்கு தொடர்புடைய ஆட்சேரப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) உரிய பதவியில் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உரிய கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பினும் வெற்றிடமாகியுள்ள பதவியொன்றில் 2006.11.01 ஆந் திகதியன்று திருப்திகரமாகவும், தொடர்ச்சியாகவும் 03 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் தொடர்பில் அரசாங்கத்தின் பயிற்சி நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் பதவியுடன் தொடர்புடைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றி சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வெற்றிடமாகவுள்ள பதவிகளில் நிரந்தரப் படுத்தலாம்.

(இ) அரசாங்க சேவை பயிற்சி நிறுவனம் அரசாங்கத்தின் தொழில் நுட்ப கல்லுரிகள், இளைஞர் சேவை மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் பயிற்றுவிக்கும் கைத்தொழில் அதிகார சபை ஆகியன இதற்கான பயிற்சி நிறுவனங்களாக ஏற்றுக் கொள்ள முடியுமென்பதுடன், நியமன

அதிகாரியினால் பதவிக்கு ஏற்புடையதாகும் என தீர்மானிக்கப்படும் 03 நாட்களிலான முழுநேர பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் போதுமானதாகும்.

(ஈ) 2007.06.30 ஆந் திகதியன்று அவ்வாறு பயிற்சிப் பாடநெறியொன்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள அலுவலர்கள் 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வண்ணம் நிரந்தரப்படுத்தலாம். பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கு பங்குபற்றியிராத ஊழியர்கள் தொடர்பில் மேற்படி (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மூலம் பொருத்தமான பாடநெறியொன்றை ஏற்பாடு செய்து கொண்டு பயிற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னர் அவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறான பாட நெறிகள் 2007.10.31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலானது நியமன அதிகாரியின் பொறுப்பாகும்.

03. இதன் பிறகு தற்காலிக, அமைய, பதிலீட்டு அல்லது ஒப்பந்த அடிப்படையிலேனும் அவ்வாறான பதவிகளுக்கு உரிய தகைமைகள் இல்லாதவர்களை ஆட்சேர்ப்புச் செய்தால் தொடர்புடைய நியமன அதிகாரி அது தொடர்பாக வகை சொல்லுதல் வேண்டும்.

ஒப்பம்/ டி. திசாநாயக்க,
செயலாள ர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு